
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1311

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

76

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# கலைஞரின் ‘இளைஞன்’ -சுயமரியாதைத் தோழன்!



‘இளைஞன்’, 2011-ஆம் ஆண்டில், கலைஞரின் கதை, திரைக்கதை, வசனத்தில் வெளிவந்த 75-வது திரைப்படம். அதுவே, கலைஞர் திரைக்கதை, வசனம் எழுதிய கடைசித் திரைப்படமும்கூட.

2011-ஆம் ஆண்டுக்குப் பிறகு, சில தொலைக்காட்சித் தொடர்களுக்கு மட்டும் வசனம் எழுதினார். இந்தப் படம், ரஷ்ய எழுத்தாளர் மாக்சிம் கார்க்கியின் ‘தாய்’ நாவலைத் தழுவி, கலைஞர் எழுதிய கதையை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டது. படத்தில் பா.விஜய், மீரா ஜாஸ்மின், குஷ்பூ, ரம்யா நம்பீசன், நமீதா, வடிவேலு, சரத்பாபு, சுமன், இளவரசு, டெல்லி கணேஷ், கருணாஸ், மணிவண்ணன், நிழல்கள் ரவி, ராஜ்கபூர், பாலாசிங், அலெக்ஸ், மொட்டை ராஜேந்திரன், தியாகு உள்ளிட்ட ஏராளமான நடிகர்கள் நடித்துள்ளனர்.

### கப்பல் கட்டும் தளம்

1959-ஐ ஒட்டிய காலம், ‘ராஜநாயகம் ஷிப்பிங் கார்ப்பரேஷன்’ எனும் கப்பல் கட்டும் தொழிற்சாலையில், தொழிலாளர்களை எவ்வித உரிமையும் அற்ற அடிமைகளாக வைத்து, 12 முதல் 16 மணி நேரம் வரை, கடுமையாக வேலை வாங்கி, குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கப்பலைக் கட்டி, வெளி நாடுகளுக்கு அனுப்புகின்றனர்.

இதை கம்பெனியின் முதலாளி ராஜநாயகமும் (சுமன்) அவனது கங்காணி காளி (மொட்டை ராஜேந்திரன்) தலைமையிலான அடியாள் படையும் சேர்ந்து செய்கின்றனர். 16 மணி நேர கடும் உழைப்பும் அதற்குக் குறைந்த கூலியும், சுகாதாரமற்ற உணவும் வழங்கப்படுவதை எதிர்த்துக் கேட்டால் அடி, உதை என்ற நிலையில், தொழிலாளர்கள் இரவில் மது குடித்துத் தங்களது உடல், மன வலியைப் போக்குகின்றனர். இக்காட்சிகள் அப்படியே நமக்கு, ‘தாய்’ நாவலில் வரும் வரிகளை நினைவூட்டுகின்றன.

மகன் ராஜநாயகத்தின் இந்த அடாவடிச் செயல்களைக் கண்டு வெறுப்படையும் அப்பா தெய்வநாயகம் (சரத்பாபு), கப்பல் கட்டும் தொழிற்சாலையைத் தொழிலாளர்களுக்கு எழுதிவைக்க முயற்சி செய்கிறார். இதனை அறியும் ராஜநாயகம், தனது காதலி சேனாவின் (நமீதா) யோசனைப்படி தெய்வநாயகத்தை விஷம் கொடுத்துக் கொன்று, அவரது உடலை கடலுக்குள் வீசி எறிந்துவிட்டு, தன் தந்தை தொழில் விஷயமாக இங்கிலாந்து சென்றுவிட்டதாகச் சொல்கிறான்.

ஒரு நாள், தொழிலாளி ஆரோக்கியசாமி (நாசர்) தொழிற்சாலையில் தன்னைத் தாக்கிய, ராஜநாயகத்தை எதிர்த்துச் சண்டையிட முடியாமல், குடித்துவிட்டு வந்து போதையில் தன் மனைவி வள்ளியம்மாளை (குஷ்பூ) அடித்து உதைக்கிறான். இதனைக் காணும் அவர்களது மகன் கார்க்கி (பா.விஜய்), தன் தந்தை ஆரோக்கியசாமியை எதிர்த்துத் தாக்க வருகிறான். இந்த அவமானத்தைத் தாங்க முடியாமல் வீட்டை விட்டு வெளியேறும் ஆரோக்கியசாமி, ராஜநாயகத்தின் மாளிகை வாசலில் போய் நின்று எதிர்த்துக் குரல் கொடுக்கிறான். ராஜநாயகத்தின் அடியாட்கள் ஆரோக்கியசாமியை அடித்துக் கொலை செய்து, தெருவில் வீசுகின்றனர்.



சக தொழிலாளர்கள் ஆரோக்கியசாமியின் உடலை, அவனது வீட்டுக்குத் தூக்கி வருகின்றனர். ஆரோக்கியசாமியின் உடலைப் பார்த்து தாயும் மகனும் கதறி அழுகின்றனர். ஆரோக்கியசாமிக்குப் பதிலாக அவரது மகன் கார்க்கி, வேலைக்குச் செல்கிறான். அங்கு நடக்கும் கொடுமைகளைக் கண்டு கொதித்துப்போகிறான். தொழிலாளர்களைக் கொடுமைப்படுத்தும் கங்காணி காளியைத் தன் முகத்தை மறைத்துக்கொண்டு கடுமையாகத் தாக்கித் தண்டிக்கிறான்.

அதனைக் கண்டு தொழிலாளர்கள் மகிழ்ச்சியடைகின்றனர். தொழிலாளர்கள் உரிமைகளுக்காகவும் அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை பெறவும், கார்க்கி தனது பேச்சாலும் எழுத்தாலும் உணர்வூட்டுகிறான். தொழிலாளர் மத்தியில் ஓர் எழுச்சி உருவாகிறது.

கார்க்கியின் இப்பணிகளுக்கு, ராஜநாயகத்தின் தங்கை மீராவும் (மீரா ஜாஸ்மின்), செட்டியார் (ஒய்.ஜி.மகேந்திரன்) மகள் - ரம்யாவும் (ரம்யா நம்பீசன்) உதவுகின்றனர். விழிப்புணர்வு பெற்ற தொழிலாளர்கள், தொழிற்சாலையின் சுற்றுச் சுவரைத் தாண்டி வெளியே சென்று சுதந்திரமாக வாழ விரும்புகின்றனர். சுற்றுச் சுவரைத் தகர்த்து வெளியேற, பீரங்கி தயாரிக்க மீரா உதவுகிறாள். ஆனால், கார்க்கியின் தாய் வள்ளியம்மையும் கார்க்கியின் மாமா கைவல்யமும் (டெல்லி கணேஷ்) வன்முறை கூடாது, அமைதி வழியில்தான் போராடி வெல்ல வேண்டும் என்கின்றனர். அதனால் பீரங்கியையும் பிற ஆயுதங்களையும் மண்ணுக்குள் புதைத்து வைத்துவிட்டு, மீண்டும் துண்டறிக்கைகளை அச்சிட்டு, கருத்துப் பிரச்சாரம் செய்கின்றனர்.

### அமைதி வழியும் ஆயுத வழியும்...

ஒருநாள், ராஜநாயகத்தை எதிர்த்து கருத்துப் பிரச்சாரம் செய்ததற்காக, கார்க்கியை கங்காணியும் அவனது அடியாட்களும் அடித்து இழுத்துச்செல்கின்றனர். அதனைத் தடுக்க முற்படும் கைவல்யத்தை, ராஜநாயகம் கொலை செய்கிறான். கார்க்கியை ராஜநாயகம் சிறையில் அடைக்கிறான். தொழிலாளர்கள் கொதித்து எழுகின்றனர். இதனை அறியும் ராஜநாயகமும் சேனாவும் சேர்ந்து திட்டமிட்டு, ராஜநாயகம் மனம் திருந்தி சேனாவை விரட்டி விடுவதாகவும், கார்க்கியை விடுதலை செய்வதுடன், இனி தொழிலாளர்கள் கோட்டையைத் தாண்டிச் சென்று சுதந்திரமாக வாழலாம் என்றும், ஆனால் அதற்கு முன்பு, மறைந்த தெய்வநாயகம் போட்ட கடைசி ஒப்பந்தப்படி, இந்த ஒரு கப்பலை மட்டும் கட்டி முடித்து, வெளிநாட்டுக்கு அனுப்பி விட வேண்டும் என்றும் சொல்லி, நாடகமாடுகின்றனர்.

இதனை நம்பும் கார்க்கியும் தொழிலாளர்களும் இரவு-பகல் பாராமல் கப்பலைக் கட்டி முடித்து ஒப்படைத்துவிட்டு, கோட்டையை விட்டு வெளியேறும் நோக்கத்துடன் தங்களது குடும்பத்தினருடன் மூட்டை முடிச்சுகளுடன் கோட்டை வாயிலை நோக்கி செல்கின்றனர். அப்போது, சேனா திரும்பி வருகிறாள். ராஜநாயகமும் அவளும் சேர்ந்து தொழிலாளர்களைப் பார்த்து நகைப்பதுடன், ‘எல்லோரும் திரும்பிச் செல்லுங்கள்; நாளை முதல் மீண்டும் 16 மணி நேரம் உழைக்க வேண்டும்’ என்று கட்டளை இடுகின்றனர். தாங்கள் ஏமாற்றப் பட்டது கண்டு தொழிலாளர்கள் பொங்கி எழுகின்றனர்.

அடியாட்களுடன் மோதுகின்றனர். செம்பையன் (கருணாஸ்) போன்ற தொழிலாளர்கள் பலரும் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். இதனைக் காணும் கார்க்கியின் தாய் வள்ளியம்மை, ‘இனி அமைதிவழி சாத்தியமில்லை, ஆயுத வழியே சரி’ என்று ஆயுதங்களைத் தோண்டி எடுக்கச் சொல்கிறாள்.

ஆயுதங்கள் தோண்டி எடுக்கப்படுகின்றன. ராஜநாயகத்தின் ஆட்களுடன் தொழிலாளர்கள் மோதுகின்றனர். கங்காணி காளி, சேனா உள்ளிட்ட அடியாட்கள் அனைவரும் கொல்லப்படுகிறனர். தொழிலாளர்கள் பீரங்கி மூலம் கப்பலைத் தகர்க்க குறி வைக்கின்றனர். ‘நமது உழைப்பில் விளைந்த கப்பலை ஏன் தகர்க்க வேண்டும்? ராஜநாயகத்தை நோக்கி பீரங்கியைத் திருப்புங்கள்’ என கார்க்கி சொல்கிறான். பீரங்கி திரும்புகிறது. ராஜநாயகம் தூள் தூளாகச் சிதறுகிறான்.



> ‘நமது உழைப்பில் விளைந்த கப்பலை ஏன் தகர்க்க வேண்டும்? ராஜநாயகத்தை நோக்கி பீரங்கியைத் திருப்புங்கள்’ என கார்க்கி சொல்கிறான்.

கப்பல் கட்டும் தொழிற்சாலை, தொழிலாளர் வசமாகிறது. கோட்டையை விட்டு வெளியேறிச் செல்லவேண்டிய அவசியமும் இல்லாமல் போகிறது. தொழிலாளர்கள் கட்டிய கப்பலை ஒப்பந்தப்படி, ஆஸ்திரேலியாவுக்கு அனுப்புகின்றனர். கார்க்கியும் ரம்யாவும் இணைகின்றனர். அத்துடன் படம் நிறைவடைகிறது. இதுவே, கலைஞரின் ‘இளைஞன்’ திரைப் படத்தின் கதை.

...காட்சி விரியும்

## மக்கள் பணத்தைப் பாழ்படுத்தும் விஜய்!

“1200 கோடி ரூபாய் மதிப்பில், புதிய தலைமைச்செயலகம் அமைக்கப்படும் என்கிற அறிவிப்பிலும், இதன் அமைப்பு, கட்டுமானம் மற்றும் இடத்தேர்விலும் விஜய்யின் ஆஸ்தான ஜோசியர் ரிக்கி ராதன் பண்டிட்டுக்குத் தட்டுப்படும் எனத் தெளிவுறுகிறது” என முகநூலில் கருத்துப் பகிர்ந்துள்ளார், கவியரசன் திருஞானம் என்பவர். அவரது விமர்சனப் பதிவில்...

“விஜய் என்கிற தனிநபருக்கேற்ற இடம், வடிவமைப்பு என்று தேர்வுசெய்யும்போது அதெப்படி ஜனநாயகம் ஆகும்? மக்களாட்சியில் நிரந்தரப் பதவி என்கிற ஒன்று இல்லை. எல்லாவற்றையும் விஜயின் ராசி, நட்சத்திரத்திற்கேற்ப தெரிவுசெய்தால், ஆட்சி மாறும்போது அடுத்து வருபவர் மீண்டும் எல்லாவற்றையும் தனக்கேற்ப மாற்றிட வெட்டிச் செலவு செய்ய வேண்டுமா?

‘பீச் வ்யூ’வில் உயரே உட்கார வேண்டுமென்கிற ஜோசியரின் ஆலோசனைப்படி, முதல்வர் அலுவலகத்தை ‘நாமக்கல் கவிஞர் மாளிகை’யின் பத்தாவது மாடிக்கு மாற்ற, ஐந்தரை கோடி ரூபாய் செலவு செய்யப்படுகிறது. டெண்டர் விடாமலே புனரமைப்புப் பணிகள் தொடங்கி, பாதி முடிந்துவிட்ட நிலையில், தாமதமாக மூன்று டெண்டர்கள் விடப்பட்டு, மூன்றையுமே ஒரே கம்பெனி எடுத்திருக்கும் தில்லுமுல்லும் இப்போது அம்பலமாகியுள்ளது. தற்போது, 1,200 கோடி ரூபாயில் ஜோசியரின் பரிகார புனஸ்காரத்திற்குத் தண்டச் செலவு வைக்கப்படுகிறது.

ஊர் முழுக்க புதுப்புது மருத்துவமனைகளைக் கட்டிய மேனாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் நினைத்திருந்தால், ஓமந்தூரார் மருத்துமனைக்குப் புதுக்கட்டடம் வழங்கிவிட்டு, மீண்டும் சட்டப்பேரவையை அங்கேயே மாற்றி இருக்க முடியும். ஈகோவினால் செய்த விஷயத்தை மறந்து, மன்னித்து, மருத்துவமனையை மாற்றாமல் மேலும் சிறப்புற செயல்பட வழிவகுத்தார். மக்களின் பணம் சிறிதளவேனும் வீணடிக்கப்படக் கூடாது என்பதில், கண்ணுங்கருத்துமாக இருந்தார்.

‘மக்களின் பணத்தைத் தொட மாட்டேன்’ என வெத்து விளம்பர ‘பஞ்ச் டயலாக்’குகளை விஜய் பெயரைத் தாங்கிய பதாகைகளை, மாநிலம் முழுவதும் ஒட்டுவதும் மக்கள் பணத்தைப் பாழ்படுத்தும் காரியமில்லையா? தனது சுயநலத்திற்காக வாஸ்து பார்க்கும் விஜய், ஆட்சி மாறினால் அதே வாஸ்து, மற்றவர்களைப் பாதிக்குமா என்பதை சிந்தித்தாரா? விஜய்க்கு, உலகம் தன்னையே சுற்றிவருவதான நினைப்பே மேலிடுகிறது” என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்





ந.ஏழுமலை

### ‘எட்ட நிக்காதீங்க, கிட்ட வாங்க’

2004-ஆம் ஆண்டு, கழக நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள திருவண்ணாமலை மாவட்டத்துக்கு வருகைதந்தார், இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள். நான் அப்போது வேலூர் பேருந்துப் பணிமனை தொ.மு.ச. பேரவைத் தலைவராக இருந்தேன். எங்கள் சங்கத்தின் சார்பில், பேருந்தை எடுத்துக்கொண்டு தலைவரைச் சந்திக்கச் சென்றோம். மாவட்டச் செயலாளர் அண்ணன் எ.வ.வேலு அவர்களின் விருந்தினர் இல்லத்தில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்த தலைவரைச் சந்தித்து, படம் எடுத்துக்கொண்டபோது, ‘எட்ட நிக்காதீங்க, கிட்ட வாங்க’ என்று அருகில் நிற்கவைத்து, படம் எடுக்கவைத்தார்.

**- ந.ஏழுமலை, செய்யாறு வட்டம், மேல்சீசமங்கலம், திருவண்ணாமலை மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### தலைமைக் கழக நிர்வாகிகள் தேர்தல்!

1978-ஆம் ஆண்டு ஜூன் 18-ஆம் தேதி, மதுரையில் கழகத்தின் பொதுக்குழுவைக் கூட்டுவதென்று அறிவிக்கப்பட்டது. மாவட்டக் கழகச் செயலாளர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் தேர்தல்கள் எல்லாம் முடிவுற்றதால், தலைமைக் கழக நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கத் தேர்தல் நடைபெற்றது. கழக நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.வி.பி.ஆசைத்தம்பி ஆணையாளராக இருந்து, தேர்தலை நடத்திவைத்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900